# கண்ணுக்கு இமையெல்லாம் முள்ளாகி வந்தால் கண்ணை யார் காப்பது?

நாம் பூலோகத்தில் வாழ்வதற்கு இன்றியமையா உறுப்புகளில் ஒன்று நமது கண்ணாகும். இந்தக் கண்ணைக் காப்பதற்கு கண்ணின் இமைகள் நம்மை அறியாமலே தம்முடைய வேலைகளைச் செய்து வருகின்றன. பல நேரங்களில் நம்முடைய மூளையின் உத்தரவு இல்லாமல் அனிச்சைச் செயலாக இமைகள் வேலை செய்கின்றன. நம்முடைய கண்ணில் ஒரு துளி தூசு விழுந்தாலும் உடனடியாக கண்ணிலே நீர் சுரந்து அந்தத் தூசியை ஒரு பக்கத்திற்குக் கொண்டு வந்துவிடும். உடனே நாம் தண்ணீர் விட்டு கண்களை சுத்தப் படுத்துகிறோம். இவ்வாறு இயல்பாக நடப்பதற்கு ஏற்ற முறையில் இறைவன் நம்முடைய உறுப்புகளை உண்டாக்கியுள்ளான்.

இந்தக் கட்டுரையின் தலைப்பு "கண்ணுக்கு இமை யெல்லாம் முள்ளாகி வந்தால் கண்ணை யார் காப்பது?" கண் என்பதற்கு உடல் என்றும், இமை என்பதற்கு நம்முடைய சுற்றத்தார், உறவினர்கள் என்றும், யார் என்பதற்கு இறைவன் (முருகப் பெருமான்) என்றும் பொருள் கொள்ளலாம்.

நாம் பிறந்தது முதல் நாம் இந்த உலகத்தில் இருக்கும்வரை மற்றவர்களுடைய உதவி கொண்டுதான் வாழ்ந்தாக வேண்டும். நாம் பிறந்தவுடன் தாய், தந்தையின் அரவணைப்பிலும், பின்பு ஆசான் கற்றுக்கொடுக்கும் பண்பினாலும், பிறகு நம் சுற்றத்தார், உறவினர்கள் பாசத்தாலும், பிறகு மனைவியின் அன்பார்ந்த துணையாலும் அதன் பிறகு நம்குழந்தைகளின் ஆதரவாலும், வாழ்ந்து இந்த மண்ணுலகை விட்டு, நாம் எங்கிருந்து வந்தோமோ அங்கே செல்கிறோம் என்று பலர் கூறுகின்றனர். மற்றவர்கள் என்பது, நம்முடைய சுற்றத்தார், உறவினர்கள் ஆவார்கள்.

இது குறித்து தெய்வப் புலவர் திருவள்ளுவர் தன்னுடைய 53ஆம் அதிகாரத்தில் "சுற்றம் தழால்" என்ற தலைப்பில் 2ஆம் குறளாக பின்வருமாறு கூறுகிறார்.

**விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா**
**ஆக்கம் பலவுந் தரும்**

இதன் பொருள் அன்பு நீங்காத சுற்றம் ஒருவனுக்கு அமையுமானால் அது அவனுக்கு மேன்மேலும் குறையாத வளம் பலவற்றையும் கொடுக்கும் என்பதாகும்.



ஒரு காலகட்டத்தில் நம்முடன் இருக்கும் சுற்றம், நம்முடைய வாழ்க்கையின் மாற்றத்தால் நம்மை விட்டு நீங்கக் கூடிய சூழ்நிலைகளும் ஏற்படுகின்றன. இதனைத் திருவள்ளுவர்,

**"தமராகித் தன்துறந்தார் சுற்றம் அமராமைக்**
**காரணம் இன்றி வரும்"**

என்கிறார்.


இதன் உட்பொருள், உறவினராய் இருந்து ஏதோ ஒரு காரணத்தால் பிரிந்தவர்கள் பின்னர் அந்தக் குறிப்பிட்ட காரணம் நீங்கி விட்டால் தானாக அவர்களே மீண்டும் வந்து சேர்வார்கள் என்பதாகும். இவ்வாறு உறவினர்கள், சுற்றத்தார் நம்மைவிட்டு நீங்கும் போது நம்மை ஆதரிப் பாரெவர் என்று உள்ளம் உருகி இறைவன் முன் நின்று மனம் விட்டுக் கதறி அழுகிறோம். இங்கே சுற்றத்தார், உறவினர்கள் (கண்ணின் இமை போல் இருப்பவர்கள் முள்ளாகி விட்டார்கள் என்று அர்த்தம் கொள்ள வேண்டும்) நம்மை மிகவும் நோகடிக்கச் செய்கின்றனர். கண்ணிலிருந்து தாரை தாரையாக நீர் வழியும் அளவுக்கு நம்மை மிகவும் வேதனைக்குள்ளாக்கிவிடுகின்றனர். இந்த வேதனை யிலிருந்து நாம் மீள்வதற்கு ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் மிக அழகான பதிகத்தை நமக்கு அருளியுள்ளார்கள்

சிவத்தமிழ் குகமணி தெ. தனபால்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526

என்பதை நாம் பார்க்கும்போது இந்த உலகத்தில் எத்தனை விதமான துன்பங்கள் மனிதரை ஆட்டுவிக்கின்றன என்பதை உணர முடிவதுடன், அவற்றிலிருந்து விடுபட எவ்வளவு அற்புதமான வழியை சுவாமிகள் நமக்குக் காட்டியுள்ளார் என்பதையும் அறிந்து மகிழ முடிகிறது.

நாம் இந்த பூமியில் பிறந்தவுடன் தாய் தன்னுடைய மடியில் போட்டுக் கொண்டு நம்மை கண்ணே! மணியே! முத்தே! என்று சீராட்டி, பாலூட்டி வளர்க்கிறாள். பின்பு மனைவி நம்மை என் அரசே! என் தலைவனே! என்று அவள் பாராட்டுகிறாள். சுற்றமும் நட்பும் அவரவர் நிலைக்கு ஏற்ப நம்மை வருணித்துக் கூப்பிடுகின்றனர். இவை எல்லாம் நிரந்தரமானவையா? இல்லையே; நாடக மேடையில் நாம்

## புற்று வடிவில் முருகன்



பல்வேறு திருக்கோயில்களிலும் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமான் எல்லா இடங்களிலும் அழகனாக உருவம் காட்டி மகிழ்ச்சியூட்டினாலும் தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்திலிருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ள சாலிகுளம் என்ற கிராமத்திலுள்ள ஒரு கோயிலில் வெறும் புற்று வடிவிலேயே இருந்து அருள்பாலித்து வருகிறார்.

ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பகுதியில் வாழ்ந்து வந்த முத்துசாமி என்ற ஒருவர் கடுமையான வயிற்றுவலியால் அவதிப்பட்டு வந்தார். எந்த மருத்துவ சிகிச்சையும் பலன் தராத நிலையில் முருகனே கதி என்று நினைத்து முருகனைப் பிரார்த்தனை செய்துவந்தார்.

ஒரு நாள் வயோதிக வடிவில் வந்த முருகப் பெருமான் அருகிலிருந்த புற்று மண்ணை எடுத்து பச்சிலையுடன் சேர்த்து உட்கொள்ளச் சொன்னார். ஒன்றும் புரியாத முத்துசாமி வயோதிகர் சொன்னதுபோல் சிறிது புற்று மண்ணை எடுத்து, பச்சிலையுடன் சேர்த்து உட்கொண்டார். உடனே சிறிது நேரத்தில் அவரது வயிற்று வலி மாயமாய் மறைந்துவிட்டது. அதேபோல அங்கே திடீரெனத் தோன்றி வைத்தியம் செய்யச் சொன்ன வயோதிகரும் மறைந்து போனார். எங்கு தேடியும் அவரைக் காணவில்லை.

அப்போதுமுதல் அப்பகுதி மக்கள் பலரும் புற்று வடிவிலேயே முருகப் பெருமானை வணங்கி வருகிறார்கள்.

நடிக்கும் போது அரசர் வேடம் தரித்திருந்தால் அந்த நாடக மேடையில் நம்மை நோக்கி "மன்னா!" என்று அழைக்கின்றனர். அந்த மேடையில் நாம் சொல்லும் வார்த்தையை அரசரின் கட்டளை என்று கருதி அதனை நிறைவேற்றுகின்றனர். ஆனால் நாடக மேடையை விட்டு இறங்கி வந்தவுடன் நாம் ஒரு சாதாரண மனிதன். அது போலத் தான் இந்த வாழ்க்கையும்; நாம் இந்த உலகத்தைவிட்டுச் செல்லும் போது நம் தாய், மனைவி, உறவினர் நம்மை "பிணம்" என்று கூறி இந்த உடலைக் தீயிடுகின்றனர். அப்படியானால் நம் உடலுடன் இருந்த ஆன்மாவின் நிலை என்ன? இதை ஆதரிப்பாரெவர்? நாம் சிறிது சிந்திகக வேண்டும்.

வெகு தூரத்தில் உள்ள பொருள்களையெல்லாம் கூட நாம் பார்க்கிறோம். ஆனால் நம் கண் நம்முடைய இமையையோ அல்லது அதில் உள்ள முடியையோ பார்க்க முடிவதில்லை. இது போலத் தான் நாம் வெளியில் இருக்கின்ற பொருள்களில் எல்லாம் இறைவன் இருக்கிறான் என்று உணருகிறோம். ஆனால் நம் இதயத்தின் நடுவில் "லப் டப்" சத்தத்துடன் நடனமாடிக் கொண்டிருக்கும் இறைவனை உணரமுடியாமல் இருக்கிறோம். இதற்கு நம் குருநாதர் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் இயற்றிய தகராலய ரகசியம் என்ற நூலில் முதலாம் காண்டத்தில் பாடிய பாடலை சிறிது இங்கே சிந்திப்போமா?

**இதய பங்கய குகர மேகுகை**
**யென்ப தாரிய பாடையில்**
**அதனு ளாய சிதம்ப ரத்துளி**
**யமல ஞானவின் மெய்யனாச்**
**சதத முஞ்சுக நடன மேபுரி**
**தம்புரானையொர் குகனெனாக்**
**கதறு மாமறை யவனை யன்றொரு**
**கடவிணாமறி யோமரோ.**

இதன் பொருள் பின்வருமாறு :–

"வடமொழியிற் குகையென்று கூறுவது இருதயதாமரை மலரின் நுழைபுலமே. அக்குடையுட் பொருந்திய சிதம்பரத்தினிடத்தே நன்மலமாகிய சிதாகாச சொரூபனாக நின்று எக்காலும் பேரின்ப நடனஞ் செய்தருளுந் தம்பிரானையே ஒப்பற்ற குகனென்று பெரும் வேதங்கள் ஓலமிடாநிற்கும். அந்தப் பரம புருடனையன்றிப் பரத்துவத்திற்குரிய கடவுளாக வேறொருவனையும் (சாத்திர வாயிலாகவேனும் ஆன்றோர் வாயிலாகவேனும்) யாம் உணர்ந் தோமல்லோம்" என்பதாகும்.

நாம் குருவாக வணங்குகின்ற ஞானியாக நம்மிடையே வாழ்கின்ற நமது குருநாதர் அத்தியாச்சிரம சுத்தாத்துவித் வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் இயற்றிய 6666 பாடல்களில் 6ஆம் மண்டலத்தில்

5ஆம் தலைப்பாக உள்ளது "பலதிறப் பொருட்காண்டம்" என்பதாகும். இதில் 11ஆம் பாடலாக வருவது ஆதரிப்பாரெவர் என்பதாகும். இப்பதிகம் கலிநிலைத்துறை (இசை)யில் இரண்டாமெழுத் தொன்றிய சிறப்புடைய அடியெதுகை இலக்கணத்தில் இயற்றப்பட்டுள்ளது. இப்பதிகம் துன்மதி வருஷம் தை மாதம் 10ஆம் தேதி சோமவாரத்தில் இயற்றப் பட்டுள்ளதாக சுவாமிகள் குறிப்பு எழுதியுள்ளார்கள்.

இந்தப் பாடலில் உள்ள மையக் கருத்து யாதெனில் முருகப் பெருமானைத் தவிர வேறு எவர் நம்மை ஆதரிக்க முடியும் ? என்ற வினாவினைத் தொடுத்துளளார்கள. இப்பாடலின் விளக்கம், பாடல் ஆகியவற்றை சண்முககவச நேயர்கள் படிக்க விரும்பினால் www.pambanswamigal.org or pambanswamigal.net இணையத் தளத்தில் "இனிய வாழ்விற்கு வழி" என்ற தலைப்பில் உள்ள 16ஆம் வரிசையில் உள்ள பாடல் மற்றும் விளக்கத்தினைப் படித்து மகிழலாம். மேலும் இந்தப் பாடலைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்பினால் அதன் அருகில் உள்ள "சுவாமிகள் பாடல் கற்க வேண்டுமா?" என்ற தலைப்பில் சென்றால் உங்கள் கணினி அந்தப்பாடலை பொருட்சுவையுடன் உங்களுக்குக் கற்றுக் கொடுக்கும்.

சுவாமிகள் முருகனை நோக்கி, "இந்த உடம்பு நீங்கினவுடன் என்னை ஆதரிப்பவர் நீயன்றி வேறு யார் உளர்?" என்று உள்ளம் உருகி கேட்டுக் கொண்டுள்ளார். மற்றும் 5ஆம் பாடலில் :-

**காவியங் கண்ணியென்ற னன்னை கானர்கு லக்கொடியைத்**
**தேவியெ னக்கொள்பிரா னிந்தத் தேயத்தி லாரிருந்தென்**
**மேவிடு நோய்க்கிடனாயுற்ற மேனிய னானேனிவ்**
**வாவிவி டுத்தவுட னென்னை யாதரிப் பாரெவரே.**

உட்பொருள்:- கருங்குவளை போன்ற கண்ணு டையவள் ஆகிய என் தாயும் வேடர் குலக்கொடியும் ஆகிய வள்ளிப் பிராட்டியைத் தேவியாகக் கொள்ளும் பிரானே! என்னைப் பீடிக்கின்ற நோய்க்கு இடம் கொடுக்கும் உடம்புடையவனாய் உள்ளேன். இந்த உலகத்தில் யார் இருந்து என்ன பயன்? இந்த உயிர் உடம்பை விட்டு நீங்கினவுடன் என்னை ஆதரிப்பவர் நீ அன்றி வேறு யார் உளர்? மேலும் அளவற்ற ஆசையால் பற்றப்பட்டுச் சுழலும் இந்த இழிந்த (உடம்பு) உயிர் தன் ஆட்டத்தை விடுத்தவுடன் என்னை ஆதரிப்பவர் நீ அன்றி வேறு யார் உளர் ? என விவரித்துள்ளார்கள்.

சைவத்திற்கென்று தன்னையே அர்ப்பணித்த நாவுக்கரசர் அவர்கள், "குற்றாலத்தில் உறையும் கூத்தன் அல்லால் உற்றார் எமக்கு வேறு எவர் உள்ளார்" என்றும் வருணித்துள்ளார் என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் இயற்றிய 4ஆம் மண்டலத்தில் உள்ள ஞானவாக்கியத்தில் 50ஆம் வாக்கியமாக அமைவது "சேய் பெண்டு சுற்றம் மாய்கின்ற மட்டும்" என்பதாகும். இதன் உட்பொருள் "மக்கள் மனைவி உறவோர் நாம் சாகும் வரை மட்டும் தான்" என்பதே.

இந்தக் கட்டுரையின் நோக்கமே நம்மை ஆதரிப்பவர் இறைவனாகிய முருகன் தான். காலத்தின் சுழற்சியில் உறவினர்கள் நம்மை விட்டுச் சென்றுவிட்டாலும், நாம் இந்த ஆதரிப்பாரெவர் என்ற பதிகத்தை பக்தியுடன் நாள் தோறும் மனமுருகிப் பாடுவது நலம் பயக்கும். இப்பதிகம் இறைவனை இளக வைக்கும் தன்மையுடையது. மேலும் இந்த உடலிலிருந்து உயிர் பிரிந்தாலும், நம்முடைய பக்தியின் பலனாய் முருகனின் திருவடியில் சென்று சேர்வோம் என்பது திண்ணம்.



# ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

**சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :**

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**